
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 241 | 4 Pages | 29.3.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 241 | 4 பக்கங்கள் | 29.3.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு**

**விளக்கம்:**
**பற்றில்லாதவனாகியகடவுளுடையபற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப் பற்றைப் பற்ற வேண்டும்.**

## அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு இறக்குமதி கார்களுக்கு 25 சதவீதம் வரி



வாஷிங்டன், மார்ச்.29

அமெரிக்காவின் நலனுக்கே முன்னுரிமை என்ற கோஷத்துடன் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று 2வது முறையாக ஆட்சி அமைத்துள்ள டொனால்ட் டிரம்ப், ஒட்டுமொத்த உற்பத்தியையும் அமெரிக்கா பக்கம் இழுக்க உலக நாடுகளுக்கு எதிராக வர்த்தக போரை தொடங்கி உள்ளார். இந்த நிலையில், அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் கார்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுவதாக தற்போது அறிவித்துள்ளார்.

இதுதொடர்பானஉத்தரவில்கையெழுத்திட்டஅதிபர்டிரம்ப்அளித்த பேட்டியில், ''இறக்குமதி கார்களுக்கான 25 சதவீத வரி வரும் ஏப்ரல் 3ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும். இந்த வரி நிரந்தரமானதாக இருக்கும். இது மிகச்சிறந்த பலனை தரும்'' என்றார். 25 சதவீத வரி மூலம் வரி வருவாய் ரூ.8.7 லட்சம் கோடி அதிகரிக்கும் என வெள்ளை மாளிகை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தற்போது பல அமெரிக்க கார் நிறுவனங்கள் அண்டை நாடுகளான மெக்சிகோ, கனடா உள்ளிட்ட இடங்களில் ஆலைகளை அமைத்து அங்கிருந்து கார்களை உற்பத்தி செய்து அமெரிக்காவுக்கு அனுப்புகின்றன. கனடா கொந்தளிப்பு: கனடா பிரதமர் மார்க் கார்னே அளித்தபேட்டியில், ''இதைஎங்கள்நாட்டின்மீதானநேரடிதாக்குதலாக இதை பார்க்கிறோம் '' என்றார்.

## எகிப்தில் 45 பயணிகளுடன் சென்ற சுற்றுலா நீர்மூழ்கி கப்பல் கடலில் மூழ்கி விபத்து: 6 பேர் பலி



கெய்ரோ, மார்ச்.29

எகிப்து நாட்டில் சுற்றுலா நீர்மூழ்கி கப்பல் கடலில் கவிழ்ந்த விபத்தில் 6 பேர் பலியாகினர். எகிப்து நாட்டின் புகழ் பெற்ற செங்கடலில் உள்ள பவள பாறைகளை பார்வையிடுவதற்காக ஹர்கடாவில் உள்ள சிண்ட்பாத் ஹோட்டலுக்கு சொந்தமான சுற்றுலா நீர்மூழ்கி கப்பல் ஒன்று 45 சுற்றுலா பயணிகளுடன் நேற்று சென்று கொண்டிருந்தது.புறப்பட்டுசென்றசிறிதுநேரத்திலேயேகடற்கரையில் இருந்து சுமார் 1 கிமீ தூரத்திலேயே நீர்மூழ்கி கப்பல் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

தகவல்அறிந்துசம்பவ இடத்துக்கு விரைந்த மீட்பு குழுவினர்கடலில் மாயமானவர்களை தேடும் பணியில் ஈடுபட்டனர். நீண்டநேர தேடலுக்கு பிறகு 6 பேரின் உடல்களை மீட்டனர். மேலும் விபத்தில் காயமடைந்த 9 பேர் உள்பட 29 சுற்றுலா பயணிகள் மீட்கப்பட்டனர். அவர்கள்அனைவரும்மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஹமாசுக்கு எதிராக காசாவில் பாலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டம்




கெய்ரோ, மார்ச்.29

காசாவில் நடந்த போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது ஹமாசுக்கு எதிராக பாலஸ்தீனியர்கள் முழக்கமிட்டனர். இஸ்ரேல் ஹமாஸ் இடையே பல்வேறு நாடுகள் மேற்கொண்ட கடுமையான முயற்சியின் விளைவாக ஜனவரி மாதம் 19ம் தேதி போர் நிறுத்தம் ஏற்பட்டது. போர் நிறுத்தம் முடிவடைந்த நிலையில் போர் இடைநிறுத்தம் ஏற்பட பேச்சுவார்த்தைதொடங்கப்படவேண்டும்என்றுவலியுறுத்தப்பட்டது. இதனிடையே காசாவை குறிவைத்து இஸ்ரேல் கடந்த வாரம் தாக்குதல் நடத்தியது. இந்நிலையில் காசாவில் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.நேற்றுமுன்தினம்தாக்குதலில்மோசமாகசேதமடைந்த பெய்ட் லஹியாவில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு போர் எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டனர். அப்போது ஹமாசுக்கு எதிராகவும், ஹமாஸ் வெளியேறு என்றும் அவர்கள் முழக்கமிட்டனர். மேலும் போரை நிறுத்து, நாங்கள் இறக்க மறுக்கிறோம், எங்கள் குழந்தைகளின் ரத்தம் மலிவானது இல்லை போன்ற பதாகைகளை அவர்கள் ஏந்தி சென்றனர்.

# தமிழ்நாட்டில் காவல்துறையினருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி: முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, மார்ச்.29

தமிழக சட்டசபையின் இன்றைய அலுவல்கள் தொடங்கி நடைபெற்று வருகிறது. கேள்வி நேரமும், துறை ரீதியான மானியக் கோரிக்கை விவாதமும் நடந்து வருகிறது. அப்போது மதுரைஉசிலம்பட்டிகாவலர்கொலை தொடர்பாக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.கவன ஈர்ப்பு தீர்மானம் முறையாக கொடுத்தால் மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அவை முன்னவர் துரைமுருகன் தெரிவித்தார். இதையடுத்து பேரவையில் எடப்பாடி பழனிசாமி கொண்டு வந்த கவன ஈர்ப்பு விவாதத்துக்கு எடுத்து கொள்ளப்படாது என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.கவன ஈர்ப்பு விவாதத்துக்கு சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததால் சட்டசபையில் அதிமுக எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில்,

சபாநாயகரை கை நீட்டி பேசுவது மரபல்ல..நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். தயாராக உள்ளேன். டிவியை பார்த்துதான் தெரிந்துகொண்டேன் எனக் கூற மாட்டேன். ஆனால், மரபை பின்பற்றுங்கள். குறிப்பிட்ட சில சம்பவங்களை வைத்து சட்டம் ஒழுங்கை குறை கூற வேண்டாம். குறிப்பிட்ட சில சம்பவங்களை வைத்து சட்டம் ஒழுங்கை குறை கூற வேண்டாம். தமிழ்நாட்டில் நடைபெறும் குற்றங்களுக்கு எதிராக உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



தமிழ்நாட்டிற்கு அவப்பெயரை ஏற்படுத்த மாநில விரோத சக்திகள், தமிழர் விரோத சக்திகள் முயற்சிக்கின்றன;தமிழ்நாட்டில் காவல்துறையினருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி நடைபெறுகிறது . என தெரிவித்தார் .

## மாண்புமிகு மன்னராட்சி முதல்அமைச்சர் அவர்களே.... விஜய் கடும் விமர்சனம்

சென்னை, மார்ச்.29

தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுக்குழு கூட்டத்தில் விஜய் பேசியதாவது:

என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்களுக்கும், தோழிகளுக்கும் வணக்கம்... வணக்கம்.. கதறல் சத்தம் எல்லாம் எப்படி இருக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் வாழ் வேண்டும் என்பது நல்ல அரசியலா?.; இல்லை ஒரு குடும்பம் மட்டும் வாழ வேண்டும் என்பது நல்ல அரசியலா?. மாநாட்டில் இருந்து தற்போது வரை இடையூறு வந்து கொண்டு தான் இருக்கிறது. எத்தனை தடைகள் வந்தாலும் தவெக முன்னேறி செல்லும். ரசிகர்கள், தொண்டர்களுக்கு தடை போட நீங்கள் யார்?.

சட்டத்தை மதிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக அமைதியாக இருக்கிறேன். அணை போட்டு ஆற்றை தடுக்கலாம் காற்றை தடுக்க முடியாது. அப்படி தடுக்க நினைத்தால் சூறாவளி காற்றாக ஏன் புயலாக கூட மாறும். பல்வேறு சோதனைகளைக் கடந்துமக்கள் சந்திப்பு தோழர்கள் சந்திப்பு நடந்து கொண்டு தான் இருக்கிறது இனியும் நடக்கும்.

மன்னராட்சி முதல் அமைச்சர் அவர்களே.... முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே... பெயரை மட்டும் வீராப்பாக சொன்னால் மட்டும் போதாதே முதல்அமைச்சர் அவர்களே.... செயலிலும் காட்ட வேண்டும் அவர்களே!... பாஜக ஆட்சியை பாசிச ஆட்சி என்று சொல்லிவிட்டு நீங்கள் செய்யும் ஆட்சி என்ன?. அதற்கு கொஞ்சம் கூட குறையாத பாசிச ஆட்சித் தானே. மக்கள் விரோத ஆட்சியை, மன்னராட்சி போல செய்கிறார்கள். கேள்வி கேட்டால் கோபம் வருகிறது.. விமர்சித்தால் மட்டும் கோபப்படுகிறார்முதல்அமைச்சர். உங்கள் ஆட்சிக்கு பெண்கள் முடிவு கட்ட போகிறார்கள்.



பொண்ணுங்களுக்கு நடக்குற கொடுமைகளை சொல்ல முடியல சார்... இதுல உங்கள அப்பானு சொல்றோம்னு வேற சொல் நீங்க... உங்க கொடுமைகளை அனுபவிக்கும் என் சகோதரிகள் தான் உங்க அரசியலுக்கும், ஆட்சிக்கும் முடிவு கட்டப்போகிறார்கள். திமுக ஓட்டுக் காககாங்கிரஸோடு தேர்தல் கூட்டணி அமைத்துள்ளது. கொள்ளையடிக்க மறைமுகமாக பாஜகவோடு கூட்டணி வைத்துள்ளது. பரந்தூர் போராட்டம், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள் என பல போராட்டங்கள் சொல்லி கொண்டே போகலாம். இது அனைத்திற்கும் தவெக உடன் நிற்கும். தமிழ்நாடு பிளவுவாத சக்திகளுக்கு எதிரான மண். இதனை நாம் பாத்துக்க வேண்டும். தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து வரும் செய்திகள் மனவேதனையை தருகிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு இருப்பதாகவே தெரியவில்லை. அதற்கு இந்த கரப்ஷன் கபடதாரி அரசு தான் காரணம். இந்த நிலைமை மாற வேண்டும். அதற்கு இருக்கின்ற ஒரே வழி, இங்கே மக்களாட்சி மலர வேண்டும். அது வர வேண்டும் என்றால், இவர்களை மாற்ற வேண்டும். அதனை செய்ய தவெக தொண்டர்கள் மக்களை தினமும் சந்திக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகளை கேளுங்கள். அதை தீர்த்தால் நம் மீது நம்பிக்கை வரும். அதன்பின் ஒவ்வொரு வீட்டிலும் தவெக கொடி பறக்கும்.

"மாண்புமிகு மோடி ஜீ அவர்களே... என்னமோ உங்க பேரெல்லாம் சொல்ல எங்களுக்கு பயம் மாதிரி சொல்லிடுறீங்க; ஏன் ஜீ... தமிழ்நாடு தமிழர்கள்னாலே அலர்ஜி?. தமிழ்நாட்டில் இருந்து வரும் ஜி.எஸ்.டி.யை வாங்கிக்கிறீங்க, ஆனா பட்ஜெட்ல நிதியை தரமாட்றீங்க... இங்க உள்ள பிள்ளைகளுக்கு நிதி தராம மும்மொழிக் கொள்கையை திணிக்கிறீங்க. தமிழ்நாட்டிடம் விளையாடாதீர்கள் பிரதமர் சார்... பலருக்கு தண்ணி காட்டிய மாநிலம் தமிழ்நாடு. இதுவரைக்கும் சந்திக்காத வித்தியாசமான தேர்தலை அடுத்த வருடம் தமிழ்நாடு சந்திக்கும். தமிழகத்தில் இரண்டு முனை போட்டி தான். அது தவெக மற்றும் திமுக இடையே தான்.

## நூற்றாண்டு கடந்த நல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா கோலாகலம்



கடலூர் மாவட்டம் நல்லூரில் நூற்றாண்டு கடந்த நல்லூர் ஊராட்சிஒன்றியநடுநிலைப்பள்ளியின்ஆண்டுவிழாதலைமை ஆசிரியர் கலைச்செல்வி தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் பரமசிவம், வட்டார கல்வி அலுவலர்கள் நளினி, ரமேஷ் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்று நூற்றாண்டு நினைவு கல்வெட்டை திறந்து வைத்தனர்.தொடர்ந்து, மாணவ மாணவிகளின் கண் கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவில் 2013 2014 ஆண்டு பயின்ற முன்னாள் பள்ளி மாணவர்கள் சார்பில் ப்ளூடூத் ஸ்பீக்கர், மைக் உள்ளிட்ட கல்வி சீர் வழங்கினர்.



மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா மதுரை வெங்கல கடை தெருவில் அமைந்துள்ள கோஆப்டெக்ஸ் அங்கையர் கன்னி பட்டு மாளிகையில் ரமலான் மற்றும் ஆண்டு இறுதி30% சிறப்பு தள்ளுபடி விற்பனையை குத்து விளக்கு ஏற்றி வைத்து பார்வையிட்டு முதல் விற்பனையை துவக்கி வைத்தார். மண்டல மேலாளர் திரு மாணிக்கம் அவர்கள், வேளாளர் திரு செந்தில் வேல் அவர்கள், முன்னாள் கோஆப்டெக்ஸ் குழு உறுப்பினர் திரு.ஸ்டாலின் அவர்கள், மேலாளர் திரு.பாடலிங்கம் அவர்கள் துணை மண்டல மேலாளர் திருமதி தீபா அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்

## அகில இந்திய அளவிலான விளையாட்டுப் போட்டியில் சீர்காழி மாணவி பங்கேற்பு

சீர்காழி, மார்ச் 29

அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்ட விளையாட்டு போட்டி இந்த ஆண்டு இப் போட்டியினை தமிழக மாநிலம் காரைக்குடி நகரத்தில் அமைந்துள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தில் அகில இந்திய போட்டியானது வருகின்ற28 மார்ச் முதல் 31 மார்ச்வரை நடைபெறுகின்றது .

போட்டியில் சிதம்பரம் அண்ணாமலை நகரில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பெண்கள் அணி சார்பில் பத்து விளையாட்டு வீரர்கள் கொண்ட குழுவானது பங்கேற்க உள்ளது இதில் ஒருவராக சீர்காழி தாலுக்கா ஓதவந்தான்குடி கிராமத்தில் வசிக்கும் தச்சு தொழிலாளி சி. ஆர். பாண்டியன் அவர்களின் மகள் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலை விளையாட்டு துறை பட்ட இயல்படிப்பு படிக்கின்ற மாணவி பா. கலைஅரசி என்பவர் இப்போட்டியில் கலந்து கொள்ள உள்ளார். இச்சாதனை புரிந்த மாணவியை சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர் செல்வம்,



அண்ணாமலை பல்கலைக்கழக உடற்கல்வித் துறை துறை தலைவர் ஆர். ராஜசேகரன், மாணவியின் முன்னாள் பயிற்சியாளர் சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப் பள்ளியின் உடற்கல்வி இயக்குனர் எஸ். முரளிதரன், சீர்காழி தொழிலதிபர் ரோட்டேரியன் சண்முகம், ஆகியோர் வாழ்த்தி வழி அனுப்பி வைத்தனர்.

## சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சி அடைப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம்

காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் காலை 10 மணி அளவில் சொத்து வரி குறைத்திட அதிகாரிகள் அராஜக ஆணவப்போக்கை கண்டித்து கடை அடைப்பு போராட்டம் காரைக்குடி மாநகராட்சி என்றவுடன் நாங்கள் மகிழ்ந்தோம் ஆனால் வீட்டு வரி செங்குத்தாக உயரும் என்று நினைக்கவில்லை கடுமையாக வரி கந்துட்டிக்காரன் போன்ற கெடுபுடி வசூல் வரி கட்டாத கடை வாசலில் குப்பைகளை கொட்டும் அராஜகம் பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் கடை உரிமையாளர்கள் ஆகியோர் பொங்கி எழுந்தனர் காரைக்குடி மக்கள் வரியை குறை குறைக்க சொல்லி தொழில் வணிக கழகம் அனைத்து கட்சியினர் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தினார்



# இரானி கொள்ளையன் உடல் ஒப்படைப்பு

சென்னை, மார்ச்.29
சென்னை தொடர் செயின் பறிப்பு சம்பவத்தில் போலீசாரால் என்கவுண்டர் செய்யப்பட்ட மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஜாபரின் உடல், மாஜிஸ்திரேட் முன்னிலையில் பிரேதப் பரிசோதனை முடிந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் எம்பாமிங் செய்யப்பட்டு, பின்னர் விமானம் மூலம் மகாராஷ்டிரா கொண்டு செல்லப்பட உள்ளது.



# சிவகிரி அருகே தோட்டத்துக்குள் புகுந்த 12 அடி நீள ராஜநாகம் பிடிபட்டது

சிவகிரி, மார்ச்.29
சிவகிரி அருகே தேவிபட்டணத்தை சேர்ந்த சிங்காரவேலு என்பவரது தோட்டத்தில் உள்ள அறையில் ராஜ நாகம் புகுந்ததாக தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் வாசுதேவநல்லூர் தீயணைப்பு சிறப்பு நிலைய அலுவலர் மாடசாமி ராஜா தலைமையில் வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அங்கு பதுங்கியிருந்த 12 அடி நீளமுள்ள ராஜநாகத்தை லாவகமாக பிடித்து சிவகிரி வனச்சரகர் செங்கோட்டையனிடம் ஒப்படைத்தனர். பிடிபட்ட ராஜநாகம் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள கோம்பையாற்று வனபகுதிக்குள் விடப்பட்டது. வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் 12 அடி நீளமுள்ள ராஜநாகம் பிடிபட்டது இதுவே முதல் என்று வனத்துறையினர் தெரிவித்தனர்.



# தாம்பரத்தில் சரக்கு ரயில் தடம் புரண்டு விபத்து

தாம்பரம், மார்ச்.29
தாம்பரம் – சானடோரியம் இடையே சரக்குரயிலின் 3 பெட்டிகள் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. வாகனங்களை ஏற்றிச் செல்லும் சரக்கு ரயிலின் 3 பெட்டிகள் தடம் புரண்ட நிலையில் சரி செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.
வேறு வழித்தடத்தில் சரக்கு ரயில் பெட்டி தடம் புரண்ட நிலையில் மற்ற வழித்தடங்களில் ரயில் சேவை பாதிப்பு இல்லை.



# மாநகராட்சிகளில் 3 கவுன்சிலர்கள் மற்றும் உசிலம்பட்டி நகராட்சித் தலைவரின் பதவிகள் பறிப்பு

சென்னை, மார்ச்.29
சென்னை மாநகராட்சியில் இரு கவுன்சிலர்கள் தாம்பரம் மாநகராட்சியில் ஒரு கவுன்சிலர் மற்றும் உசிலம்பட்டி நகராட்சித் தலைவர் ஆகியோரை பதவிநீக்கம் செய்து நகராட்சி நிர்வாகத்துறை செயலாளர் உத்தரவிட்டுள்ளார். உள்ளாட்சி விதிகளை மீறியதாக சென்னையின் 189வது வார்டு கவுன்சிலர் பாபு, 5வது வார்டு கவுன்சிலர் சொக்கலிங்கம், தாம்பரத்தில் 40வது வார்டு கவுன்சிலர் ஜெயபிரதீப், உசிலம்பட்டி நகராட்சி தலைவரும் 11வது வார்டு கவுன்சிலருமான சகுந்தலா ஆகியோர் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.




# சோதனை ஓட்டம் வெற்றி; அகஸ்தியன்பள்ளி திருவாரூர் மின்பாதையில் விரைவில் ரயில் சேவை

வேதாரண்யம், மார்ச்.29
நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் 13 ஆண்டுகளுக்கு முன் மீட்டர்கேஜ் ரயில் சேவை நிறுத்தப்பட்டு அகல ரயில் பாதை அமைக்கும் பணி நடந்தது. 2 ஆண்டுகளுக்கு முன் பணி நிறைவடைந்து. 2023ம் ஆண்டு ஏப்ரல் 7ம் தேதி முதல் டெமோ ரயில் இயக்கப்பட்டது. தற்போது அகஸ்தியன்பள்ளி திருவாரூர் இடையே மின் வழித்தடம் அமைக்கப்பட்டு முதல்கட்ட ரயில் சோதனை ஓட்டம் கடந்த 23ம் தேதி நடந்தது.
இந்நிலையில் நேற்று 2வது கட்ட சோதனையாக அகஸ்தியன்பள்ளியில் இருந்து திருச்சிக்கு 120 கிமீ வேகத்தில் மின் வழித்தடத்தில் டெமோ ரயில் இயக்கப்பட்டது. இது திருத்துறைப்பூண்டி, திருவாரூர்
வழியாக திருச்சி சென்றது.
இதுகுறித்து ரயில்வே அதிகாரிகள் கூறுகையில், மின் வழித்தடத்தில் ரயில் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்தது. மின்பாதையில் அகஸ்தியன்பள்ளியில் இருந்து திருவாரூர் வரை பயணிகள் ரயில் விரைவில் இயக்கப்படும் என்றனர்.



# சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் உள்ள டெலிகாம் அலுவலகத்தில் தீ விபத்து

சென்னை, மார்ச்.29
சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் உள்ள டெலிகாம் அலுவலகத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. ஏசியில் மின் கசிவு காரணமாக தீவிபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து சிக்னல் கட்டுப்பாட்டு அறைக்கும் தீ பரவியது. இதன் காரணமாக புறநகர் மின்சார ரயில்களுக்கு சிக்னல் அளிப்பதில் சுமார் 40 நிமிடங்களுக்கு மேலாகா சிக்கல் நிலவியது. குறிப்பாக சென்னை எழும்பூர்–கடற்கரை மார்க்கத்தில் சிக்னல் பிரச்சனையானது கண்டறியப்பட்டதாகவும், தொடர்ந்து அது சரி செய்யப்பட்டுள்ளதாகவும் ரயில்வே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தாம்பரத்தில் இருந்து சென்னை கடற்கரை வரை செல்லக் கூடிய அனைத்து மின்சார ரயில்களும் தற்போது வழக்கம் போல் இயக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கபட்டுள்ளது. டெலிகாம் அலுவலகத்தின் முதல் மாடியில் ஏற்பட்ட தீயை அனைக்க வேப்பேரியில் இருந்து தீயணைப்பு வாகனங்களில் விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் தீயை அணைத்தனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.



# தூத்துக்குடியில் 4 கிரஷர் ஆலைகளுக்கு சீல் வைப்பு

தூத்துக்குடி, மார்ச்.29
ஸ்ரீவைகுண்டம் தாலுகா பகுதியில் லைசன்ஸ் புதுப்பிக்காமல் செயல்பட்டுவந்த 4 கிரஷர் ஆலைகளுக்கு சீல் வைக்கபப்ட்டுள்ளது. மேலும், மாவட்ட ஆட்சியரின் உத்தரவைத் தொடர்ந்து மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வில் மொத்தம் 20 கிரஷர் ஆலைகள், அனுமதியின்றி இயங்குவது தெரியவரவே, அனைத்திற்கும் சீல் வைக்க நடவடிக்கை என கனிம வளத்துறையினர் தகவல் தெரிவித்துள்ளது.

# திருவாரூரில் நில அதிர்வு?

திருவாரூர், மார்ச்.29
திருவாரூர் நகர் பகுதி, மன்னார்குடி, கூத்தாநல்லூர் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டதாக பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர். வீட்டுக்குள் இருந்த மேஜைகள், கடையில் இருந்த பொருட்கள் அதிர்ந்ததாக மக்கள் கூறுகின்றனர்.



# 3 வழித்தடங்களில் மித அதிவேக ரெயில் சேவை: டெண்டர் வெளியிட்டது மெட்ரோ ரெயில் நிறுவனம்

ஊட்டி, மார்ச்.29
நீலகிரி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் தற்போது வன விலங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்நிலையில், ஊட்டி அருகே கல்லக்கோடு மந்து பகுதியை சேர்ந்த தோடர் பழங்குடியின வாலிபர் கேந்தோர் குட்டன் (38), நேற்று முன்தினம் தனது வளர்ப்பு எருமைகளை மேய்ப்பதற்காக கவர்னர் சோலை பகுதியில் உள்ள வனப்பகுதிக்கு சென்றுள்ளார். பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என தெரிகிறது. இந்நிலையில், நேற்று காலை ரோந்து பணியில் ஈடுபட்ட வனத்துறை ஊழியர்கள் காட்டிற்குள் குட்டன் உடலில் காயத்துடன் சடலமாக கிடந்தார். அவர் சிறுத்தை அல்லது புலி தாக்கி உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுகிறது. இந்த நிலையில் வன விலங்குகள் பழங்குடியின மக்களை தாக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பலியான வாலிபரின் உடலை வாங்க மறுத்து பொதுமக்கள், உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# பொது இடங்களில் நடப்பட்டுள்ள கொடிக்கம்பங்களை ஏப்.21க்குள் அகற்ற வேண்டும்: அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, மார்ச்.29
தமிழகம் முழுவதும் பொது இடங்கள், தேசிய, மாநில நெடுஞ்சாலைகள், உள்ளாட்சி இடங்களில் கொடிக்கம்படங்களை ஏப்ரல் 21ம் தேதிக்குள் அகற்ற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் இறுதிகெடுவிதித்துள்ளது.
சென்னை சேர்ந்த வழக்கறிஞர் ராகேஷ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்த பொது நல வழக்கில் ராயபுரம் பகுதியில் நடைபாதையில் அமைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சியின் கொடிக்கம்பத்தையும், கல்வெட்டையும் அகற்ற உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் மற்றும் முகமதுசபீக் ஆகியோர் அடங்கி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.
அப்போது அரசு சார்பில் ஆஜரான அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் ஏற்கனவே மதுரை உயர்நீதிமன்ற கிளையில் தனி நீதிபதி, தமிழகம் முழுவதும் பொது இடங்கள், தேசிய, மாநில நெடுஞ்சாலைகள், உள்ளாட்சி இடங்களில் உள்ள கொடிக் கம்பங்களை 12 வாரங்களில் அகற்ற வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார். தனி நீதிபதியின் உத்தரவை இரு நீதிபதிகள் அமர்வும் உறுதி செய்துள்ளது. இது தொடர்பாக அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்றார்.
இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், ஏப்ரல் 21ம் தேதிக்குள் தமிழகம் முழுவதும் பொது இடங்கள், தேசிய, மாநில நெடுஞ்சாலைகள், உள்ளாட்சி இடங்களில் கொடிக்கம்பங்களை அகற்றப்பட வேண்டும். அப்படி அகற்றவில்லயெனில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை மனுதாரர் தொடரலாம் எனக்கூறி வழக்கை முடித்து வைத்தனர்.




# சென்னை விமான நிலையத்திற்கு ரூ.1.31 கோடியில் ஓடுதள பாதை பராமரிப்பு வாகனம்: விமான நிலைய ஆணையம் ஒதுக்கியது

சென்னை, மார்ச்.29
சென்னை விமான நிலையத்திற்கு ரூ.1.31 கோடியில் ஓடுதளப் பாதை பராமரிப்பு பணிக்கு அதிநவீன வாகனத்தை இந்திய விமான நிலைய ஆணையம் வழங்கியுள்ளது. சென்னை விமான நிலையத்திற்கு கடந்த 8ம் தேதி, மும்பையில் இருந்து வந்த இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம், ஓடுபாதையில் உராய்ந்த படி ஓடி தரையிறங்கியது. இதில், அதிர்ஷ்டவசமாக விபத்து ஏற்படவில்லை.
இதுதொடர்பாக, டெல்லியில் உள்ள டைரக்டர் ஜெனரல் ஆப் சிவில் ஏவியேசன் எனப்படும் டிஜிசிஏ முழுமையான விசாரணைக்கு உத்தரவிட்டது.
டிஜிசிஏ குழுவினர் நடத்திய விசாரணையில், சென்னை விமான நிலையத்தில் உள்ள 2 ஓடுதளப் பாதைகளிலும், விமானங்கள் தரையிறங்கும்போது, கிரீப்பிங் என்ற உராய்வு தன்மை குறைவாக இருந்ததால், விமானத்தின் சக்கரங்கள் சறுக்கியபடி சென்றது தெரியவந்தது. இதையடுத்து இந்திய விமான நிலைய ஆணையம், 8 புதிய ஏர்போர்ட் சர்பேஸ் பிரிக்டன் டெஸ்டர் வாகனங்களை வாங்கியுள்ளன. அதில் சென்னை விமான நிலையத்திற்கு மட்டும் தனியாக ஒரு வாகனத்தை, இந்திய விமான நிலைய ஆணையம் ஒதுக்கியுள்ளது.



# இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட ராமநாதபுரம் மீனவர்கள் 7 பேர் சென்னை வந்தனர்

சென்னை, மார்ச்.29
ராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள் மற்றும் ராமேஸ்வரம் மீனவர்கள் 3 பேரையும், கடந்த பிப்ரவரி மாதம் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.
இதையடுத்து இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், இலங்கை அரசிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். தொடர்ந்து, இலங்கை நீதிமன்றம், தமிழக மீனவர்கள் 7 பேரையும், கடந்த இரு நாட்களுக்கு முன்பு சிறையில் இருந்து விடுவித்து இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைத்தது. இதைத்தொடர்ந்து மீனவர்கள் 7 பேருக்கும், சென்னை வரும் ஏர் இந்தியா பயணிகள் விமானம் மூலம் சென்னைக்கு வந்தனர். சென்னை விமான நிலையத்தில், மீனவர்களை தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்று, அரசு ஏற்பாடு செய்த வாகனம் மூலம் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



# குன்னூர் மார்க்கெட்டில் இரவில் பயங்கர தீ: 14 கடைகள் எரிந்து சேதம்

குன்னூர், மார்ச்.29
குன்னூர் மார்க்கெட் கடைகளில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்பு துறையினர் விடியவிடிய போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருந்தாலும், 14 கடைகள் எரிந்து சேதமானது. நீலகிரி மாவட்டம், குன்னூர் நகர பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட் பகுதியில் 800க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன.
இந்த நிலையில் நேற்று இரவு மார்க்கெட் கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்ட நிலையில் 10.30 மணி அளவில் அழகு சாதன பொருட்கள் விற்கும் ஒரு கடையில் மின்கசிவு ஏற்பட்டு, திடீரென கடைகள் தீப்பிடித்து எரிந்தன. மேலும் மார்க்கெட் வளாகத்தில் அனைத்து கடைகளும் அடுத்தடுத்து ஒட்டிய நிலையில் இருந்ததால், தீ மளமளவென 14க்கும் மேற்பட்ட கடைகளுக்கு பரவியது. தவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த குன்னூர் தீயணைப்பு துறையினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்போது தண்ணீர் பற்றாக்குறையால் தீயை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு தீயணைப்பு துறையினர் திணறினர்.
மேலும் அருகிலுள்ள கடைகளுக்கும் தீ பரவி எரிந்தால் பொதுமக்களும் வியாபாரிகளும் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இருந்தாலும் தீயைகட்டுக்குள்கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலையில் இருந்து இரண்டு தீயணைப்பு வாகனங்களும், ஊட்டி தீயணைப்பு நிலையத்திலிருந்து ஒரு வாகனமும் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் முயற்சியில் வீரர்கள் ஈடுபட்டனர். 28 தீயணைப்பு வீரர்கள் விடியவிடிய தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வந்தாலும் தீயை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு அதிகாலை 3 மணியாகியது.
இந்த தீ விபத்து இரவு நேரத்தில் ஏற்பட்டதால் உயிரிழப்புகளும், அசம்பாவிதங்களும் தவிர்க்கப்பட்டது. அதற்குள் நகை கடைகள், துணி கடைகள் உட்பட 14 கடையில் உள்ள பொருட்கள் அனைத்தும் எரிந்து சேதமானது. இந்த விபத்து தொடர்பாக குன்னூர் நகர போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். கடையில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக மார்க்கெட் பகுதியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்து குன்னூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் தமிழில் குடமுழுக்கு நடத்துவது குறித்து அரசு பதில் தர ஐகோர்ட் உத்தரவு

சென்னை, மார்ச்.29

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் தமிழில் குடமுழுக்கு நடத்துவது குறித்து அரசு பதில் தர ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.



நாம் தமிழர் கட்சியின் மாநில செயலாளர் விஜயராகவன் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தமனுவில், "கோவை மாவட்டம் மருதமலை முருகன் கோவில் குடமுழுக்கு விழா ஏப்ரல் 4ம் தேதி நடைபெற உள்ளது.


முருகனின்ஏழாம் படைவீடாக கருதப்படும் மருதமலை முருகன் கோவில் குடமுழுக்கு விழாவை தமிழில் நடத்த உத்தரவிட வேண்டும். கடந்த 2020ம் ஆண்டு உயர்நீதிமன்ற மதுரை அமர்வு,

அரசுக்கு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் குடமுழுக்கு விழாவை தமிழில் நடத்தும்படி அனைத்து செயல் அலுவலர்களுக்கும் அறிவுறுத்தி அரசாணை பிறப்பிக்க வேண்டும்," எனமனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதி பரத சக்கரவர்த்தி முன் விசாரணைக்கு வந்தது. அப்போதுமருதமலைமுருகன் கோவில் குடமுழுக்கு விழாவை தமிழில் நடத்த கோரி தாக்கல் செய்யப்பட்ட வேறொரு வழக்கு நாளை விசாரணைக்கு வர உள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, மனுதாரரின் கோரிக்கை குறித்து அரசின் கருத்தை அறிந்து தெரிவிக்கும்படி அரசு தரப்புக்கு உத்தரவிட்ட நீதிபதி, ஏற்கனவே மருதமலை முருகன் கோவில் குடமுழுக்கை தமிழில் நடத்தக் கோரிய வழக்குடன் சேர்த்து இந்த வழக்கையும் நாளை விசாரணைக்கு பட்டியலிட உத்தரவிட்டார்.

# அரசு பள்ளி வகுப்பறையை சூறையாடிய மாணவர்கள்: சேலம் அருகே பரபரப்பு



சேலம், மார்ச்.29

சேலம் அருகே சாத்தப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில், பிளஸ் 2 இறுதி தேர்வு எழுதிய மாணவர்கள், வகுப்பறையில் இருந்த மின்விசிறி, டேபிள், சேர்களை உடைத்து நொறுக்கி சேதப்படுத்தி விட்டு சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே சாத்தப்பாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் சுமார்400க்கும்மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

இப்பள்ளியை சேர்ந்த 101 மாணவர்கள், நடப்பாண்டு பிளஸ் 2 பொதுத் தேர்வு எழுதினர். நேற்று முன்தினம் பிளஸ்2 பொதுத்தேர்வு முடிவடைந்தது. பள்ளியில் இறுதி தேர்வு முடிந்ததும், பிளஸ்2 மாணவர்கள் சிலர், பள்ளி வகுப்பறையில் உள்ள மின்விசிறி, இரும்பு இருக்கைகள், டேபிள் உள்ளிட்ட பொருட்களை உடைத்து, நொறுக்கி சேதப்படுத்தினர். மேலும், தலைமை ஆசிரியர் அறையில் உள்ள கை கழுவும் குழாயை உடைத்துள்ளனர்.

இதனால் தலைமையாசிரியர் அறை முழுவதும் தண்ணீர் சூழ்ந்து, அறையில் வைக்கப்பட்டிருந்த மாணவர்கள் எழுதிய தேர்வு தாள்கள் மற்றும் பொருட்கள் முழுமையாக நனைந்து வீணானது. இதில் சில பேப்பர்களை மீட்டு எடுத்து, பள்ளி வளாகத்தில் வெயிலில் காய வைத்தனர். பிளஸ்2 தேர்வு எழுதி வெளியே செல்லும் மாணவர்கள், பள்ளி வளாகத்தில் உள்ள பொருட்களை சேதப்படுத்தியது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# வெள்ளியங்கிரி மலையேறும் பக்தர்களுக்கு கட்டுப்பாடு

கோவை, மார்ச்.29

கோவை வெள்ளியங்கிரி மலையேறும் பக்தர்களுக்கு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வனத்துறை வெளியிட்டுள்ளது. மலையில் பழைய துணிகளை வீசுவது, அனுமதியின்றி மரக்கன்றுகளை நடுவதுஉள்ளிட்டவீடியோ வைரலானதை அடுத்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மலையேறும்பக்தர்கள் அனுமதித்த பாதையில் மட்டுமே செல்ல வேண்டும்; அனுமதியின்றி மரக்கன்றுகளை நடக் கூடாது. பிளாஸ்டிக் பொருட்கள், எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்களை பக்தர்கள் எடுத்துச் செல்லக் கூடாது. வெள்ளியங்கிரி 6வது மலையில் ஈரத்துணிகளைஅங்கேயே போட்டுவிட்டு செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

# திண்டுக்கல் மாவட்டம், காசம்பட்டி கோயில் காடுகள், பல்லுயிர் பராம்பரிய தலமாக தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, மார்ச்.29

திண்டுக்கல்மாவட்டம், காசம்பட்டி (வீர கோவில்) கோயில் காடுகள், பல்லுயிர் பராம்பரிய தலமாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காசம்பட்டி (வீர கோவில்) கோயில் காடுகளை தமிழ்நாட்டின் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவிக்க ஒப்புதல் அளித்துள்ளார்.

அதன்படி, திண்டுக்கல் வனப்பகுதியில் அழகர் மலை காப்புக்காடுக்கு அருகில் அமைந்துள்ள காசம்பட்டியை உயிரிய பன்முகச் சட்டம் 2002ன் கீழ் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவித்து, அரசிதழில் இதற்கான அறிவிப்பை சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை வெளியிட்டுள்ளது.

இது தமிழ்நாட்டில் அறிவிக்கப்படும் இரண்டாவது பல்லுயிர் பாரம்பரிய தலமாகும். இதன் அடையாளமாகஅமைச்சர்வனம் மற்றும் கதர்த் துறை அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் காசம்பட்டி (வீர கோவில்) பல்லுயிர் பாரம்பரிய தலம் பற்றிய குறும்படத்தினை வெளியிட்டார்கள். மதுரை மாவட்டத்தில் உள்ள அரிட்டாபட்டி, 2022ஆம் ஆண்டில் முதல் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா, ரெட்டியபட்டி பஞ்சாயத்து, காசம்பட்டி கிராமத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள வீர கோவில் ஒரு கோயில் காடுகள் ஆகும். 4.97 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் இந்த கோயில் காடுகள் இன்றும் காலத்தை வென்று நிலை கொண்டுள்ளது. இந்தக் காடுகளைச் சுற்றிலும் உள்ள பசுமையான மாந்தோப்புகள் இயற்கை அழகையும், வளத்தையும் மேலும் மெருகூட்டுகிறது.

வன விலங்குகளை பாதுகாத்தல் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையை எய்த உதவும் வகையில் ஒரு பாலமாக இது விளங்குகிறது.

இதன் ஆன்மீக முக்கியத்துவத்திற்கு அப்பால், சுற்றுச்சூழலில், கோயில் காடுகள் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன. இது பல்லுயிரியலைப் பாதுகாக்கிறது மற்றும் உள்ளூர் காலநிலையை ஒழுங்குபடுத்துகிறது.

வீர கோவில், கோயில் காடுகளில் உள்ளூர் தெய்வமான "வீரணன்" குடிகொண்டு ள்ளதால் உள்ளூர் மக்களால் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது.

இந்த காடுகள் பல்லுயிர் பன்முகத்தன்மையின்முக்கிய இடமாகும். இக்காடுகள் 48 தாவர இனங்கள், 22 புதர்கள், 21 கொடிகள் மற்றும் 29 மூலிகைகள் உட்பட தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் குறிப்பிடத்தக்க பல்லுயிர்களின் தாயகமாகும், இது காடுகளின் பாரம்பரிய செழுமைக்கு பங்களிக்கிறது.

இப்பகுதியில் 12க்கும் மேற்பட்ட பறவை இனங்கள், பல்வேறு சிறிய பாலூட்டிகள், ஊர்வன மற்றும் எண்ணற்ற பூச்சிகள் போன்ற அனைத்தும் இந்த பாதுகாக்கப்பட்ட சூழலில் செழித்து வளர்கின்றன.

இது பாரம்பரிய பன்முகத் தன்மையின் கருவூலமாகவும் செயல்படுகிறது, சுற்றுச்சூழலின் மீள் தன்மை மற்றும் தழுவலுக்கு பங்களிக்கும் பல்வேறு வகையான தாவர இனங்கள் உள்ளன. இந்த மரபணு வளம் மகரந்தச் சேர்க்கையை ஊக்குவித்தல் மற்றும் மண் வளத்தை அதிகரிப்பதன் மூலம், மாந்தோப்புகள் உட்பட சுற்றியுள்ள விவசாய நிலங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் உள்ளது.

இந்த பாரம்பரிய தலத்தின் செழுமையான பன்முகத் தன்மை, கலாச்சார முக்கியத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் மதிப்புடன், காசம்பட்டி (வீர கோவில்) கோயில் காடுகள் பாதுகாப்பு மற்றும் நிலையான பாரம்பரியத்தின் முன்மாதிரியாக உள்ளது. மரபியல் பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதில் அதன் முக்கியப் பங்கைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு காசம்பட்டி (வீர கோவில்) கோயில் காடுகளை 2002ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவித்து, அதன் பாதுகாப்பை தலைமுறைகளுக்கும் உறுதி செய்துள்ளது.

# நீதிமன்றத்தில் கலெக்டர் ஆஜர்

மதுரை, மார்ச்.29

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த உதவி வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணன் என்பவரின் பதவி உயர்வு தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஐகோர்ட் மதுரை கிளையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் ராமநாதபுரம் கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் நேரில் ஆஜரானார்.

அப்போது அரசு தரப்பில், கலெக்டர் ஆஜராகி உள்ளதால் வழக்கை விரைந்து விசாரணை செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இதனால் கோபமடைந்த நீதிபதி பட்டு தேவானந்த், "சட்டத்திற்கு முன் அனைவரும்சமமே. வழக்கு வரிசைப்படி வரும். அதுவரை கலெக்டர் காத்திருக்கட்டும்" என்றார்.



இதனைத் தொடர்ந்து, காலை 11 மணி முதல் மாலை 6 மணி வரை நீதிமன்றத்தில் காத்திருந்த பிறகு அவரது வழக்கை விசாரித்த நீதிபதி, "நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று கோர்ட் உத்தரவிட்டால் தான் நீங்கள் கோர்ட் உத்தரவை மதிக்க வேண்டுமா? காலதாமதமாக நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தியதற்கான உரிய காரணத்தை கூறுங்கள்" என்று கேட்டு இறுதியில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தீர்ப்புக்காக தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தார்.

# 'என்ன கல்யாணம் பண்ணிட்டு அவ கூட ஹனிமூனா': விமானத்தில் மனைவியுடன் வந்திறங்கிய வாலிபரை வறுத்தெடுத்த இன்ஸ்டா காதலி

கோவை, மார்ச்.29



கோவை விமான நிலையம் நேற்று முன்தினம் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. இரவு 7.30 மணியளவில் சென்னையில் இருந்து கோவைக்கு வந்தவிமானத்தில்இருந்து பயணிகள் இறங்கி வரவேற்பு வளாகத்துக்கு வந்து கொண்டிருந்தனர். அவர்களுடன் ஒரு வாலிபர் தனது மனைவியுடன் வந்து கொண்டிருந்தார். திடீரென அவர்களை கழுத்தில் மஞ்சள் கயிறு அணிந்திருந்த ஒரு இளம்பெண் சூழ்ந்து கொண்டார். மனைவியுடன்வந்த வாலிபருடன் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட முயன்றார்.

ஆனால் மனைவியுடன் வந்த வாலிபர், பதற்றத்துடன் எதுவும் பேசாமல் அங்கிருந்து புறப்பட்டு செல்வதில் குறியாக இருந்தார். அப்போது அருகில் நின்ற இன்னொரு வாலிபர் அந்த இளம்பெண்ணின் கையை இறுக்கமாக பிடித்துக்கொண்டு, விமானத்தில் இருந்து இறங்கி வந்த வாலிபரிடம் அந்த இளம்பெண் செல்லாமல் பார்த்துக்கொண்டார். இதனால் அந்த இளம்பெண் விமானத்தில் இருந்து இறங்கி வந்த வாலிபரை நோக்கி வசைபாட ஆரம்பித்தார்.

''என்னகல்யாணம் பண்ணிட்டு, அவ கூட ஹனிமூன் போயிட்டு வர்றியா? பொம்பள பொறுக்கி..'' என கேட்டு வறுத்தெடுத்தார். அந்த வாலிபருடன் சென்ற பெண்ணை பார்த்து, ''அவன நம் பாதே..'' என்றும் கூறினார்.பின்னர்விமானத்தில் இருந்து இறங்கி வந்த வாலிபரை பிடிக்க முயன்றார். ஆனால் அவரை செல்லவிடாமல் கையை இறுக்கி பிடித்திருந்த வாலிபர் பார்த்துக்கொண்டார். அவரையும் அந்த இளம்பெண், ''கைய விடு. என் கைய பிடிக்க நீ யாரு?'' என கேட்டு திட்ட ஆரம்பித்தார்.

ஆனால் அந்த வாலிபர் அந்த இளம்பெண்ணை விடவில்லை. இறுக்கி பிடித்துக்கொண்டார். ஆனாலும் அந்த இளம்பெண் அவரிடம் இருந்து திமிறியபடியும், ''அவன பிடிங்க... அவன பிடிங்க... டேய் ஸ்டேஷனுக்கு வாடா...'' என கூறியபடியும் விமானத்தில் இருந்து இறங்கி வந்த வாலிபரை நோக்கி செல்ல ஆரம்பித்தார். அதற்குள் மனைவியுடன் வந்த வாலிபர் விட்டால் போதும் என்று அங்கு நின்ற காரில் ஏறிச் சென்றுவிட்டார்.

இளம்பெண்ணை போலீசார், போலீஸ்நிலையத்துக்கு செல்லுமாறு கூறி சமாதானம் செய்ய முயன்றனர். ஆனால் அந்த இளம்பெண் சமாதானம் அடையவில்லை.மாறாகஅவரது ஆத்திரம் கையை இறுக்கி பிடித்திருந்த வாலிபரை நோக்கிபாய்ந்தது. அவரை நோக்கி ஓடிய அந்த இளம்பெண், அந்த வாலிபரின் கன்னத்தில் பளார் அறை விட்டார். சட்டையை பிடித்து இழுத்தபடி, ''அவனுக்கு சேப்டியா வந்தியா? அவன் இரு பொம்பள பொறுக்கி, நீ இரு பொம்பள பொறுக்கி என திட்ட ஆரம்பித்தார்.

அப்போது அங்கு நின்ற போலீஸ்காரர் இளம்பெண்ணை சமாதானம் செய்யமுயன்றார். ஆனால் அந்த இளம்பெண், ''என்ன சேப்டியா? சேப்டியா? காசு இருந்தால் என்ன வேண்டுமானாலும் பண்ணுவீங்களா?'' என்று கேட்டு அவரிடம் தகராறு செய்தார்.

இதையடுத்து தனது கையை பிடித்திருந்தவாலிபரிடம் அந்த இளம்பெண் தகாத வார்த்தை பேசியபடி, ''வயிறு எரியுதுடா? சத்தியமா சொல்றேன்'' என்று வசை பாடினார். அவரது இந்த ரகளையை அங்கு நின்றவர்கள் செல்போனில் வீடியோ எடுத்தனர்.

அவர்களையும் இளம்பெண் சும்மா விடவில்லை. ''இவ்ளோ பேர் நிக்கிறீங்க... ஒரு ஆளு அவன பிடிச்சீங்களா? எல்லாரும் வீடியோ மட்டும் எடுக்கிறீங்க. யாராவது அவன பிடிச்சீங்களா?'' என ஆவேசமானார். இதைத்தொடர்ந்து அந்த இளம்பெண்ணை போலீசார் பீளமேடு போலீஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர். அவரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது அந்த இளம்பெண் போலீசாரிடம், விமானத்தில் இருந்து இறங்கி வந்த வாலிபர் தன்னை திருமணம் செய்து ஏமாற்றிவிட்டதால் நியாயம் கேட்க வந்ததாக கூறியுள்ளார்.

இதுகுறித்து போலீசார் கூறியதாவது: விமான நிலையத்தில் தகராறில் ஈடுபட்ட பெண்ணும், அந்த வாலிபரும் இன்ஸ்டாகிராமில் பழகி வந்ததாக தெரிகிறது. அப்போது இருவரும் காதலித்து, திருமணம் செய்து கொண்டதாக அந்த பெண் கூறுகிறார். அதன் பின்னர் அந்த வாலிபர் தனக்கு தெரியாமல் வேறு திருமணம் செய்து கொண்டதாகவும், தனது கண்ணில் படாமல் இருந்து வந்ததாகவும், தற்போது எகிப்தில் இருந்து கோவைக்கு அந்த வாலிபர் வருவதை தெரிந்து கொண்டு அவரிடம் நியாயம் கேட்க விமான நிலையத்திற்கு வந்ததாகவும் அந்த இளம்பெண் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அந்த வாலிபர்மீது புகார்அளிக்க வேண்டும் என கேட்டார். ஆனால்திருமணம், பெண் தொடர்பான புகாராக இருந்தால்மகளிர்போலீஸ் நிலையத்துக்கு சென்று புகார் அளிக்குமாறு அவரிடம் அறிவுறுத்தினோம். அதனால் அந்த பெண் இங்கிருந்து புறப்பட்டு சென்று விட்டார். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர். கோவை விமான நிலையத்தில் பரபரப்பை ஏற்படுத்திய இந்த இளம்பெண்ணின் வீடியோ தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# வானிலை அறிக்கையில் இந்தி திணிப்பு: மதுரை எம்பி கண்டனம்

வானிலை ஆய்வு மைய அறிக்கையில் இந்தி திணிக்கப்பட்டுள்ளதற்கு மதுரை எம்பி சு. வெங்கடேசன் கண்டனம் தெரிவித்துள்ளார். மதுரை மார்க்சிஸ்ட் எம்பி சு.வெங்கடேசன், எக்ஸ் தளத்தில், ''தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பை வழங்கும் சென்னை மண்டல வானிலை மையம் தனது அன்றாட வானிலை அறிக்கையை இந்தியிலும் வழங்கத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டின் பேரிடர் பாதிப்பு நிவாரணத்துக்கு நிதியுதவி அளிக்காத ஒன்றிய அரசு பேரிடர் முன்னறிவிப்பில் இந்தியைத் திணிக்கிறது. பாஜவிற்கு தமிழ்நாட்டு மக்களின் நலன் என்றுமே முக்கியமானதாக இருந்ததில்லை என்பதற்கு இந்நடவடிக்கை மற்றுமொரு உதாரணமாகும்'' என்று பதிவிட்டுள்ளார்.

# நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

நாசரேத் மார்ச் 29




தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின்படி, நாசரேத் மார்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உதவி தலைமையாசிரியை சாரா ஞானபாய் தலைமை தாங்கினார். திருச்செந்தூர் கல்வி மாவட்ட சாரணர் இயக்க செயலாளர் சிவகுமார் மற்றும் நாசரேத் காவல் நிலைய முதல் நிலை காவலர் அம்சுராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ் வரவேற்றார். நாசரேத் காவல் நிலைய காவலர் சாமுவேல் ராஜ் சிறப்புரை ஆற்றினார். அவர் பேசுகையில், மாணவர்கள் போதை பழக்கத்திற்கு அடிமையாவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கி கூறினார். தனியார் பள்ளி நிர்வாக அலுவலர்கண்ணபிரான் பேசுகையில், போதை பழக்கம் மாபெரும் தீங்கு விளைவிக்கும், போதையில்லா பாதையை மாணவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து, போதை பழக்கத்திற்கு எதிரான உறுதி மொழி வாசிக்கப்பட்டது. மாணவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் எழுந்து நின்று உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். போதைப்பொருட்களின் உற்பத்தி, நுகர்வு மற்றும் பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிராக மாணவர்கள் செயல்பட வேண்டும் என்று நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பின்னர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகத்தின் சார்பில் வழங்கப்பட்ட போதை ஒழிப்பு விழிப்புணர்வு பதாகைகள் பள்ளியின் முக்கிய இடங்களில் மாணவர்கள் பார்க்குமாறு காவலர்கள்மற்றும் சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் ஒட்டப்பட்டன. நிகழ்ச்சியில், நாசரேத் காவல் நிலைய காவலர் குணசுந்தர், ஆசிரியர்கள் பட்டுராஜன், கிறிஸ்டோபர் லிவிங்ஸ்டன் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, நிர்வாகப் பிரிவு ஆசிரியர்கள் ஜெபநேசன், பரத் சிமியோன் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# ஒன்றிய அரசின் வக்பு மசோதாவை எதிர்த்து பேரவையில் தீர்மானம்; சிறுபான்மை மக்களின் உண்மையான நண்பர் என்பதை முதல்வர் நிரூபித்து விட்டார்

சென்னை, மார்ச்.29

சிறுபான்மை மக்களின் உண்மையான நண்பர் என்பதை முதல்வர் மு.க ஸ்டாலின் நிரூபித்து விட்டார் என தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர் எஸ் கே நவாஸ்நன்றி தெரிவித்துள்ளார்.



இது குறித்து தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர் எஸ்.கே. நவாஸ் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முதல்வரால் இன்று கொண்டுவரப்பட்ட ஒன்றிய அரசின் வக்பு மசோதாவை எதிர்த்து இன்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது அவருடைய தனித்தன்மையையும் சிறுபான்மை மக்களின் உண்மையான நண்பர் என்று நிரூபித்து விட்டார். நம்மை ஆண்ட வெள்ளைக்காரர்கள் கொண்டு வந்த கொடுமையான சட்டத்தை விட மிக கொடுமையான கொலைகார சட்டத்தை ஒன்றிய அரசு மோடியின் அரசு கொண்டுவந்துள்ளது திருத்தம் என்ற பெயரில் அவருடைய திருத்தமே வக்பு சட்டத்தை அடிப்படையிலேயே காலி செய்யும் ஒரு திருத்தம் ஆகும்.

மதசார்பற்ற நாட்டில் சிறுபான்மையினரை பல வழியில் தாக்குவதும் அவருடைய அடிப்படை வாழ்வுரிமையை பறிக்கும் செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இஸ்லாமிய மக்கள் இன்று தெரிந்து கொள்ள வேண்டும் நம்முடைய உண்மையான நண்பர்கள் யார் என்று முதல்வர் பல்லாண்டு வாழ தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த முஸ்லிம் சமுதாயத்தின்சார்பாக வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

29.3.2025

# காரைக்குடி ரோட்டரி சங்க டயாலிசிஸ் சென்டர் திறப்பு விழா




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள செட்டிநாடு குமாராணி மருத்துவமனை காரைக்குடி செட்டிநாட்டில் அமைந்துள்ள புகழ்பெற்ற குமாரணி மருத்துவமனையில் காரைக்குடி ரோட்டரி சங்க டயாலிசிஸ் சென்டர் திறப்பு விழா மார்ச் 29 ஆம் தேதி சனிக்கிழமை காலை 11 மணி அளவில் நடைபெறுகிறது முன்னாள் மத்திய நிதி அமைச்சர் பா சிதம்பரம் .கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர் பெரியப்பன் .

ரோட்டோரி மாவட்ட ஆளுநர் மீரான் கான் சலீம் நன்கொடையாளர் வீர நாராயணன்.மாங்குடி எம் எல்ஏ .கானாடுகாத்தான் சேர்மன் ராதிகா ராமு மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்கின்றனர்

# டெல்லியில் எடப்பாடி சந்தித்த நிலையில் உச்சி வெயிலில் பாஜவுக்கு உதயகுமார் ஓவர் ஐஸ்



மதுரை, மார்ச்.29

இந்திய தேசத்தின் இரும்புமனிதர்அமித்ஷா என மாஜி அமைச்சர் உதயகுமார் திடீரென புகழ்ந்துள்ளார். அதிமுக முன்னாள் அமைச்சர் உதயகுமார்நேற்று வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது: இரண்டு நாட்களுக்கு முன் எடப்பாடி, இந்திய தேசத்தின் இரும்பு மனிதர் என வர்ணிக்கப்படும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை நேரில் சந்தித்து பேசியது, இந்திய நாட்டிலே பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது. தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைகளை எடுத்து வைப்பதில் திறமையானவர் எடப்பாடி. இன்றைக்கு தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளையும் பெற்றுத் தருவதற்காக அந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. இந்தியாவின் இரும்பு மனிதரான வல்லபாய் படேலின் மறுவடிவமாக அமித்ஷா பார்க்கப்படுகிறார். தமிழகத்தின் ஜீவாதார உரிமைகளை பெற்று தருவதற்காக தான் இந்த சந்திப்பு நிகழ்வு நடைபெற்று இருக்கிறது. இந்த உண்மையை மறைக்க பல்வேறு செய்திகள் பரப்பப்படுகிறது. தமிழக மக்கள் நலன் சார்ந்த கோரிக்கையை அமித்ஷாவிடம் 2 மணிநேரத்துக்கு மேலாக பேசியுள்ளார்.இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாஜவுடன் கூட்டணி இல்லை என்று அதிமுகவினர் கூறி வந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்று கூட்டணியை உறுதி செய்தி திரும்பிய நிலையில், அதிமுக தலைவர்கள் பாஜ தலைவர்களை புகழ்ந்து பேசுவதும், சப்பை கட்டும் பேட்டிகளும் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் சூழலுக்கு ஏற்ப தடலாடி பல்டி அடித்து பேட்டி கொடுப்பதில் அதிமுகவில் உதயக்குமாருக்கு போட்டியே இல்லை என அக்கட்சியினரே கூறுகின்றனர். சசிகலா, டிடிவி தினகரன், ஓபிஎஸ்சை ஆரம்பத்தில் ஓவராக புகழ்ந்து பேசியும், அரசியல் சூழ்நிலைகள் மாறியதும் தடாலடியாக புழுதி வாரித் தூற்றியும் அவர் அளித்த பழைய பேட்டிகள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# அழகன்குளத்தில் அருங்காட்சியகம்அரசு பரிசீலிக்க ஆணை



மதுரை, மார்ச்.29

ராமநாதபுரம் அழகன்குளத்தில் அகழாய்வு அருங்காட்சியகம் அமைக்கக் கோரிய வழக்கில் அரசு பரிசீலிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு 12 வாரங்களில் பரிசீலித்து முடிவெடுக்க உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. அழகன்குளம் அகழாய்வில் கிடைத்த பொருட்களை அருங்காட்சியகம் அமைத்துகாட்சிப்படுத்த வேண்டும் என கோரி மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

# மதுரை மாநகர் முனிச்சாலை பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளி 91 ஆம் ஆண்டு விழா




மதுரை மாநகர் முனிச்சாலை பகுதியில் அமைந்துள்ளமாநகராட்சிதொடக்கப்பள்ளி 91 ஆம் ஆண்டு விழா பள்ளி கலையரங்கத்தில் நடைபெற்றது இதில் மதுரை மாநகராட்சி கல்வி குழுதலைவர்MPR ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார்

மதுரை மாநகராட்சி கல்வி அலுவலர் ஜெய்சங்கர் முன்னிலை வகித்தார் ஆசிரியர் கணேசன் வரவேற்புரை ஆற்றினார் ஆசிரியர் பௌலின் ஆண்டறிக்கை ஆற்றினார். நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை திரு. T குருசாமி மாணவ மாணவியர்களுக்கு தேவையான பள்ளி உபகரணங்கள் நன்கொடையாக வழங்கினார், வட்டார கல்வி அலுவலர் மதுரை தெற்கு மோசஸ் பெஞ்சமின் பள்ளி மேற்பார்வையாளர் OMR. தனேஸ்வரி ஆசிரியர் பயிற்றுநர் சுரேஷ் 59 வார்டு மாமன்ற உறுப்பினர் அபுதாஹிர் பள்ளி குழந்தைகளின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் LKG முதல் ஐந்தாவது வகுப்பு வரை உள்ள மாணவ மாணவியர்களின்கலைநிகழ்ச்சி நடைபெற்றது KG ஆசிரியர் ஆதிரை பிலோமினா மற்றும் K G ஆசிரியர் ரெங்க சௌத்ரி அவர்கள் கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்கள் பள்ளி தலைமை ஆசிரியர் குழந்தை ராஜா சிங் நன்றியுரையாற்றினார் பள்ளி தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் எஸ் எம் சி குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மாநகராட்சி தொடக்கப் பள்ளி ஆண்டு விழாவினை சிறப்பாக நடத்தினர்

# தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் திருப்பணிகள் தீவிரம்



தென்காசி, மார்ச்.29

தென்காசி காசி விசுவநாதர்கோவில் கடந்த 15 ஆம் நூற்றாண்டில் மாமன்னர் பராக்கிரம பாண்டியனால் வடக்கே கங்கை நதிக்கரையில் அமைந்த காசி விஸ்வநாதரைப் போல் தெற்கே சிற்றாற்றின் றாற்றின் கரையில் காசி விஸ்வநாதர் கோவில் வேண்டும் என்ற நோக்கத்தில் கட்டப்பட்டது.

அப்போது இந்த கோவிலின் கோபுரம் 11 அடுக்குகளை கொண்டதாக இருந்த நிலையில் இயற்கையின் சீற்றத்தினால் கோபுரம்சிதலமடைந்தது. இதனால் இந்த கோவிலின் இராஜ கோபுரம் சிதிலமடைந்த நிலையிலேயே காணப்பட்டது. அதனை சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் சார்பில் கோரிக்கை விடப்பட்டது. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட தினத்தந்தி அதியர் பா.சிவந்தி ஆதித்தனார் தென்காசி காசி விசுவநாதர் கோவிலின் ராஜகோபுரத்தை சீரமைத்து அதனை 187 அடி உயரம் கொண்ட ஒன்பது அடுக்குகளை கொண்ட கோபுரமாக உருவாக்கினார் அதன்பின் கோவில் திருப்பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று 1990 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது வழக்கமாக 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும். ஆனால் தற்போது 18 வருடங்கள்நிறைவுபெற்ற நிலையில் தென்காசி பகுதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் உடனடியாக காசி விஸ்வநாதர் கோவிலில் திருப்பணிகள் நடத்தி மகா கும்பாபிஷேகம் நடைபெற வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். பொதுமக்களின் பொது மக்களின் கோரிக்கையை ஏற்றுக் ஏற்றுக் கொண்ட தமிழக அரசு தமிழகம் முழுவதும் இந்து சமய அறநிலையத்துறையினர் 2000க்கும் மேற்பட்ட கோவில்களை திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தி வரும் நிலையில் தென்காசி காசி விசுவநாதர் கோவிலுக்கும் கும்பாபிஷேகம் நடத்திட முடிவு செய்யப்பட்டது. இதற்காக சுமார் 3 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன இந்தப் பணிகளை தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏகே கமல் கிஷோர் காவல்துறை கண்காணிப்பாளர் எஸ் அரவிந்த் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர் அப்போது கோவில் செயல் அலுவலர் பொன்னி மற்றும் அறநிலையத்துறை அதிகாரிகளுடன் திருப்பணிகளை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் அறங்காவலர் குழு தலைவர் வல்லம் பாலகிருஷ்ணன் தென்காசி நகர் மன்றத் தலைவர் ஆர்.சாதிர், மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் முருகேசன், முருபுவிதா, ஷீலாகுமார், மூக்கன் மற்றும் கோவில் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# சாதிய பாகுபாடு, இஸ்லாமிய வெறுப்பு பற்றி பேசும் படத்துக்கு ஒன்றிய சென்சார் போர்டு தடை: ஆஸ்கருக்கு பரிந்துரைக்கப்பட்ட படம்



பிரிட்டிஷ்இந்திய திரைப்பட இயக்குநர் சந்தியா சூரி இயக்கிய திரைப்படம் 'சந்தோஷ்' . கடந்த ஆண்டு இந்த படம் வெளிநாடுகளில் வெளியானது. 'சந்தோஷ்'படம்இங்கிலாந்துசார்பாகஆஸ்கர்விருதுக்குபரிந்துரைக்கப்பட்டது. இந்நிலையில் இந்த படத்தை இந்தியாவில் வெளியிட தணிக்கை வாரியம் (சென்சார்போர்டு) தடை விதித்துள்ளது. வட இந்தியாவில்நடக்கும்கதையான இந்தப் படம். கணவன் இறந்த பிறகு அவருக்குப் பதிலாக காவல் பணியில் சேரும் ஒரு பெண்ணின் கதையைச் சொல்கிறது. பின்னர் அந்தப் பெண் போலீசிடம் ஒரு தலித் பெண்ணின் கொலை வழக்கு ஒப்படைக்கப்படுகிறது.

வட இந்தியாவில் நிலவும் சாதிய பாகுபாடு, இஸ்லாமிய வெறுப்பு, பாலியல் வன்முறை ஆகியவற்றை பற்றி இப்படம் பேசுகிறது. இந்நிலையில் படத்தில் உள்ள கருத்துக்கள் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கூறி பல பகுதிகளை வெட்ட தணிக்கை வாரியம் கோரியுள்ளது. ஆனால் அதற்கு படக்குழு மறுத்துள்ளதால் படத்தை வெளியிட தடை ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக பேசிய படத்தின் ஹீரோயின் ஷஹானா கோஸ்வாமி. \"படத்தை வெளியிடுவதற்குத் தேவையான சில மாற்றங்களின் பட்டியலை சென்சார் வழங்கியுள்ளது. எங்கள் முழு குழுவும் அதனுடன் உடன்படவில்லை. ஏனென்றால் அவர்கள் படத்தில் நிறைய மாற்றங்களைச் செய்ய விரும்புகிறார்கள், எனவே, இந்திய திரையரங்குகளில் வெளியிட முடியவில்லை\" என்றார்.

# ஸ்ருதி நாராயணனின் ஆபாச வீடியோ லீக்: ரசிகர்கள் அதிர்ச்சி



நடிகை ஸ்ருதி நாராயணின் ஆபாச வீடியோ ஒன்று இணையத்தில் கசிந்து இருக்கிறது. இது ரசிகர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. அந்த வீடியோவில் உள்ள பெண் ஸ்ருதியின் முகசாயலில் இருக்கிறார். மார்பிங் செய்ததாக கூட இருக்கலாம் என்ற பேச்சுக்களும் அடிப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் ஹீரோயின் ஆடிஷனுக்காக அவரை யாரோ இப்படி செய்ய வைத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இதுவரைநடிகைதரப்பிலிருந்து இது பற்றி எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. சட்ட நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்பு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. பொதுவாக சமீபகாலமாகவே நடிகைகளுக்கு இப்படி ஒரு சம்பவமும் நடந்து வருகிறது. இந்த சம்பவம் குறித்து ரசிகர்கள் தங்களுடைய கண்டனங்களை பதிவிட்டு வருகிறார்கள். சினிமாவில் உள்ள காஸ்டிங் கோச் நபர் ஒருவர்தான் இதுபோன்ற செயலில் ஈடுபட்டதாகவும் நடிகையின் நிர்வாண வீடியோவை அவர் வைரலாக்கி இருப்பதாகவும் தெரிகிறது.


# மம்மூட்டிக்கான சிறப்பு பூஜை தகவலை வெளியிட்டது யார்? மோகன்லாலுக்கு தேவசம்போர்டு பதிலடி



மலையாள நடிகர் மோகன்லால் கடந்த சில தினங்களுக்கு முன்பு இருமுடி கட்டுடன் சபரிமலை சென்று தரிசனம் செய்தார். லூசிபர் படம் வெற்றி பெற பிரார்த்தனை செய்ய சென்றதாக கூறப்பட்டது. ஆனால் குடல் புற்று நோய் காரணமாக சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நடிகர் மம்மூட்டி நலம் பெற சிறப்பு பூஜை நடத்தினார் என்ற தகவல் பின்னர் வெளியானது. இந்நிலையில் சென்னையில் நடிகர் மோகன்லால் நிருபர்களிடம் கூறும்போது, 'மம்மூட்டிக்காக நான் சபரிமலையில் பூஜை செய்ததில் என்ன தவறு. இந்த தகவலை திருவிதாங்கூர் தேவசம் போர்டை சேர்ந்தவர்கள் தான் வெளியிட்டனர்' என்று கூறினார். இந்த தகவலை திருவிதாங்கூர் தேவசம் போர்டு மறுத்துள்ளது.

இது குறித்து தேவசம் போர்டு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'சபரிமலையில் பூஜை நடத்தும்போது அதற்கான அசல் ரசீது பக்தர்களுக்கு வழங்கப்படும். முகம்மது குட்டி என்ற பெயரில் மோகன்லாலுக்காக பூஜை நடத்திய நபரிடம் அசல் ரசீது கொடுக்கப்பட்டது. அந்த ரசீது தான் பத்திரிகைகளில் வெளியானது. தேவசம் போர்டை சேர்ந்த யாரும் இந்த ரசீதை வெளியிடவில்லை. மோகன்லால் இதை தவறாக புரிந்து கொண்டுள்ளார். அவர் உண்மையை புரிந்து கொண்டு தனது நிலைப்பாட்டை திருத்தி கொள்வார் என்று கருதுகிறோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பூரன், மார்ஷ் அதிரடி அரைசதம் லக்னோவுக்கு முதல் வெற்றி



ஐபிஎல் டி20 லீக் தொடரில் சன்ரைசர்ஸ் ஐதராபாத்துக்கு எதிராக நிக்கோலஸ் பூரன், மிட்செல் மார்ஷ் அதிரடி அரைசதம் அடிக்க லக்னோ சூப்பர்ஜெயண்ட்ஸ் அணி முதல் வெற்றியை பதிவு செய்தது. ஐதராபாத்தில் நேற்றிரவு நடந்த இப்போட்டியில் டாஸ் வென்ற லக்னோ அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. சன்ரைசர்ஸ் அணியில் டிராவிஸ்ஹெட்,அபிஷேக்சர்மாதொடக்கவீரர்களாக களமிறங்கினர். ஆட்டத்தின் 3வது ஓவரில் ஷர்துல் தாக்கூரின் துல்லிய பந்துவீச்சில் அபிஷேக் சர்மா (6 ரன்), இஷான்கிஷன் (0) அடுத்தடுத்து அவுட்டாகி அதிர்ச்சியளித்தனர்.

அதிரடியாக ஆடிய டிராவிஸ் ஹெட் 47 ரன் (28) எடுத்த நிலையில், போல்டானார். அடுத்து வந்த கிளாஸன்(26ரன்)துரதிஷ்டவசமாகரன்அவுட்டானார். நிதீஷ்குமார்ரெட்டி 32 ரன்னிலும் (28 பந்து), கேப்டன் கம்மின்ஸ் 18 ரன்னிலும் (4 பந்து) ஆட்டமிழந்தனர். இளம் வீரர் அனிகேத் வர்மா, 13 பந்துகளில் 5 சிக்ஸர்களுடன் 36 ரன்கள் விளாசியதன் மூலம் சன்ரைசர்ஸ் 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 190 ரன் எடுத்தது. லக்னோ அணியில் ஷர்துல் தாக்கூர் 34 ரன்கள் கொடுத்து, 4 விக்கெட் கைப்பற்றினார்.

191 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய லக்னோ அணியில் தொடக்க வீரர் மார்க்கரம் 1 ரன்னில் ஆட்டமிழந்தாலும், அடுத்து ஜோடி சேர்ந்த மிட்செல் மார்ஷ், பூரன் ஜோடி அதிரடியாக ஆடியது. பூரன் 18 பந்திலும், மார்ஷ் 29 பந்திலும் அரைசதம் அடித்தார். இந்த ஜோடி 43 பந்தில் 116 ரன் விளாசியது.

பூரன் 70 ரன்னிலும் (26 பந்து, 6 சிக்ஸ், 6 பவுண்டரி), மார்ஷ் 52 ரன்னிலும் (31 பந்து) கம்மின்ஸ் பந்தில் ஆட்டமிழந்தனர். ரிஷப் பண்ட் (15), பதோனி (6) விரைவில் ஆட்டமிழந்த போதிலும், அடுத்து வந்த சமத் (22 ரன்★, 8 பந்து), மில்லர் (13 ரன், 7 பந்து) அதிரடி காட்ட லக்னோ 16.1 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 193 ரன் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. முந்தைய போட்டியில் டெல்லியிடம் தோற்ற லக்னோ தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.

# மயாமி ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் ஜெசிகா, இயலா: இகா அதிர்ச்சி தோல்வி




அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் மயாமி ஓபன் டென்னிஸ் போட்டி நடக்கிறது. காலிறுதி ஆட்டங்கள் நேற்று நடந்தன. பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் பிலிப்பைன்ஸ் வீராங்கனை இயலா அலெக்சாண்ட்ரா(19வயது, 140), போலாந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக் (23வயது, 2வது ரேங்க்) ஆகியோர் மோதினர்.

முதல் முறையாக டபிள்யூடிஏ போட்டியில் களம் கண்டுள்ள இயலா ஆரம்பம் முதலே முன்னணி வீராங்கனையான இகாவை திணறடித்து புள்ளிகளை குவித்தார். முதல் செட்டை 62 என்ற புள்ளிக் கணக்கில் வசப்படுத்தினார். தொடர்ந்து 2வது செட்டில் இழுபறி நீடித்தது. ஒரு கட்டத்தில் இயலா 24 என்ற கணக்கில் பின்தங்கி இருந்தார். எனினும் 2வது செட்டையும் போராடி 75 என்ற புள்ளிக் கணக்கில் கைப்பற்றினார். இதன்மூலம் இயலா 20 என நேர் செட்களில் உலகின் 2ம் நிலை வீராங்கனை இகாவுக்கு அதிர்ச்சி அளித்து முதல் முறையாக அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலாவும் இங்கிலாந்தின் எம்மா ராடுகானும் மோதினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் இரு செட்டுகளை ஆளுக்கொன்றாக கைப்பற்றிய நிலையில் 3வது செட் பரபரப்பானதாக அமைந்தது. இதில் ஆவேசமாக விளையாடிய பெகுலா 62 என்ற கணக்கில் கடைசி செட்டை கைப்பற்றி வெற்றி பெற்று அரையிறுக்கு முன்னேறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.